பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

30 08 2025 SATURDAY 7 15 AM

தலைப்புச் செய்திகள்

1. இந்தோ – பசிபிக் பகுதியை சுதந்திரமான, அமைதியான மற்றும் வளமான பகுதியாக மாற்ற இந்தியாவும், ஜப்பானும் உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று மஹாராஷ்ட்ராவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

3. புதுதில்லி ரயில் நிலையத்தில் பயணிகளுக்கான வசதிகளை அதிகரிக்குமாறு அதிகாரிகளுக்கு ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் அறிவுறுத்தியுள்ளார்.

4. ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின், வரும் டிசம்பர் மாதம் இந்தியாவுக்கு வருகை தரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

5. சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச இளையோர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியா 7 தங்கம் உட்பட 26 பதக்கங்களை வென்றது.

>>>>><<<<<

இந்தோ – பசிபிக் பகுதியை சுதந்திரமான, அமைதியான மற்றும் வளமான பகுதியாக மாற்ற இந்தியாவும், ஜப்பானும் உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, டோக்கியோவில் நேற்று அந்நாட்டு பிரதமர் திரு. Shigeru Ishiba-வை சந்தித்து விரிவான பேச்சுக்கள் நடத்தினார்.

பாதுகாப்பு தளவாட உற்பத்தி மற்றும் புத்தொழில் ஆகியவற்றில் தற்போதுள்ள பரஸ்பர ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இருநாடுகளும் முடிவு செய்துள்ளதாக சமூகவலைதளத்தில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள உத்திசார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இருவரும் ஒப்புக் கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விண்வெளித் துறையில் ஒத்துழைத்து செயல்பட இஸ்ரோ மற்றும் ஜப்பான் விண்வெளி நிறுவனங்களுக்கு இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தையும் தாம் வரவேற்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

இந்த பேச்சுக்களுக்குப் பின்னர், இருநாட்டு பிரதமர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

முதலீடு, சுற்றுச்சூழல், தொழில்நுட்பம், சுகாதாரம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றில் கவனம் செலுத்த இருநாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளதாக அப்போது அவர்கள் கூறினர்.

செயற்கை நுண்ணறிவு, செமி கண்டக்டர், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார பராமரிப்பு ஆகிய துறைகளில் ஒத்துழைத்து செயல்படவும், இந்த துறைகளில் இருநாடுகளைச் சேர்ந்த சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை இணைக்கவும் இந்த பேச்சுவார்த்தையின் போது ஒப்புக் கொள்ளப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

>>>>><<<<<

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று மஹாராஷ்ட்ராவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

இரண்டு நாள் பயணமாக மும்பை சென்றுள்ள அவர், அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸை சந்தித்து, நடப்பு அரசியல் நிலைமை மற்றும் மராத்தா இடஒதுக்கீடு கோரி நடத்தப்படும் போராட்டத்தின் தற்போதைய நிலை குறித்து விவாதிக்கவுள்ளார்.

விரைவில் அம்மாநிலத்தில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இதுகுறித்தும் முதலமைச்சருடன் விவாதிக்கவுள்ளார்.

துணை முதலமைச்சர்கள் திரு. ஏக்நாத் ஷிண்டே, திரு. அஜித் பவார் ஆகியோரையும் அவர் சந்தித்து பேசவுள்ளார்.

முன்னதாக, பாந்த்ரா, அந்தேரி ஆகிய பகுதிகளில் நடைபெறும் விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத்தில் திரு. அமித் ஷா பங்கேற்கவுள்ளார்.

>>>>><<<<<

புதுதில்லி ரயில் நிலையத்தில் பயணிகளுக்கான வசதிகளை அதிகரிக்குமாறு அதிகாரிகளுக்கு ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் அறிவுறுத்தியுள்ளார்

தில்லி ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை நேற்று நேரில் ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

வரும் பண்டிகை காலத்தில் ரயில் நிலையத்திற்கு பயணிகள் நெரிசல் இல்லாமல் வந்து செல்ல மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடிக்குமாறும், பயணிகள்

தங்குவதற்காக கட்டப்பட்டு வரும் வளாகத்தை விரைவில் திறக்குமாறும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

பயணச்சீட்டு பெறும் பகுதியை வசதியான இடத்திற்கு மாற்றவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் உத்தரவிட்டார்.

>>>>><<<<<

மீன்வளத்துறையில் ஐரோப்பிய நாடுகளுடன் ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில், கேரள மாநில அரசு திருவனந்தபுரத்தில் இரண்டு நாள் சர்வதேச மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

அடுத்த மாதம் 18ஆம் தேதி கோவளத்தில் தொடங்கவுள்ள இந்த மாநாட்டில், மீன்வளத் துறையில் பரஸ்பர நலன்கள் தொடர்பாக விவாதிக்கப்படும் என்று கேரள மாநில அரசு தெரிவித்துள்ளது.

கடல் உணவுப் பொருட்கள் தொடர்பான கொள்கை ஒன்றை வகுக்கவும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின், வரும் டிசம்பர் மாதம் இந்தியாவுக்கு வருகை தரவுள்ளார்.

மாஸ்கோவில் நேற்று ரஷ்ய வெளியுறவுத்துறை இதனை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

சீனாவின் Tianjin நகரில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக, நாளை மறுநாள் திரு. விளாடிமிர் புட்டின், பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேசவுள்ளார்.

அப்போது, இந்திய வருகைக்கான ஏற்பாடுகள் குறித்து அவருடன் விவாதிப்பார் என்று ரஷ்ய வெளியுறவுத்துறையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்திய பொருட்கள் மீது அமெரிக்கா 50 சதவீத வரியை விதித்துள்ளதால் எழுந்துள்ள பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாகவும் இந்த சந்திப்பின் போது, இரு தலைவர்களும் விவாதிக்கவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

>>>>><<<<<

இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மீது அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்துள்ள கூடுதல் வரி விதிப்பு சட்டவிரோதமானது என்று அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

திரு. டோனல்ட் ட்ரம்ப் நிர்வாகத்தால் விதிக்கப்பட்ட பெரும்பாலான வரிகள், அமெரிக்காவின் சட்டங்களுக்கு உட்பட்டதாக இல்லை என்று நீதிபதிகள் கூறியுள்ளனர்.

அதேநேரத்தில். இந்த தீர்ப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ள அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப், இந்தியா, சீனா, மெக்ஸிகோ உள்ளிட்ட நாடுகள் மீது விதிக்கப்பட்ட அனைத்து வரிகளும் நடைமுறையில் இருக்கும் என்று உறுதிபட கூறியுள்ளார்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு பாரபட்சமாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் பொருளாதாரத்தை பாதுகாக்கவே, சில நாடுகள் மீது வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலிருந்து பின்வாங்கினால், அது அமெரிக்காவின் பொருளாதாரத்தை பலவீனப்படுத்திவிடும் என்றும் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறினார்.

>>>>><<<<<

சாலை பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

விபத்துக்களின் போது பாதிக்கப்படும் மக்களுக்கு உதவுவதற்காக இளைஞர்களை தயார்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக சேலத்தைச் சேர்ந்த பேராசிரியர் செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தெலங்கானா மாநிலத்தில் மழையால் பாதிக்கப்பட்ட கம்மாரெட்டி, நிஸாமாபாத், மேடக் மாவட்டங்களில் வெள்ள நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சதாசிவ் நகர் - Bhiknoor இடையே தேசிய நெடுஞ்சாலை 44-ல் பல்வேறு இடங்களில் ஏற்பட்டுள்ள உடைப்பை சரி செய்யும் பணிகளில், நெடுஞ்சாலைத்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

இன்று அம்மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் அதிக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு இன்றும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் ஆயிரம் கிலோமீட்டர் நீளமுள்ள சாலையில், 800 இடங்களில் சேதம் ஏற்பட்டுள்ளதாக அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

31 இடங்களில் சாலைகள் முழுவதுமாக வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக போக்குவரத்து மாற்றுப்பாதையில் திருப்பி விடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

>>>>><<<<<

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச இளையோர் குத்துச்சண்டை போட்டியில் இந்தியா 7 தங்கம், 7 வெள்ளி, 12 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

இதில், மகளிர் பிரிவில் 5 தங்கம், 5 வெள்ளி, 6 வெண்கலப்பதக்கங்களுடன் இந்தியா இறுதிப்போட்டியில் ஆதிக்கம் செலுத்தியது.

46, 60, 66 மற்றும் 80 கிலோ எடைப்பிரிவுகளில் இந்தியா கூடுதலாக வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கங்களை வென்றது.

இளையோர் குத்துச்சண்டைப் பிரிவில் இந்தியா வலுவாக உள்ளதை இது எடுத்துக்காட்டுகிறது.

ஆடவர் பிரிவில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளி, 6 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>><<<<<

17 வயதுக்குபட்டோருக்கான தெற்காசிய மகளிர் கால்பந்துப் போட்டியில் இந்தியா 5-0 என்ற கோல்கணக்கில் நேபாளத்தை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

திம்புவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெற்ற வெற்றியுடன் மொத்தமுள்ள 5 போட்டியிலும் வெற்றிபெற்று இந்தியா 15 புள்ளிகளை பெற்று, புள்ளி பட்டியலில் முதலிடத்தை பெற்றது.

நாளை நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் இந்தியா – பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

தஜுகிஸ்தானில் நடைபெற்ற CAFA கோப்பை கால்பந்து போட்டியில் இந்தியா நேற்று 2-1 என்ற கோல்கணக்கில் தஜுகிஸ்தானை வென்றது.

>>>>><<<<<

பாரிஸில் நடைபெற்று வரும் உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதியில், சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணை, உலக தரவரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ள மலேசியாவின் Aaron Chia – Wooi Yik Soh-வை 21-12, 21-19 என்ற செட்கணக்கில் தோற்கடித்து, அரையிறுதிக்கு முன்னேறியது.

இன்று நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் இந்திய இணை, உலக தரவரிசையில் 11வது இடத்தில் உள்ள சீனாவின் Liu - Chen இணையை எதிர்கொள்கிறது.

>>>>>END<<<<<